[2022] 2 எஸ்.சி.ஆர். 591

ஒன்றிய அரசு மற்றும் பலர்

–எதிர்–

மஞ்சு அரோரா மற்றும் ஒருவர்

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 7027–7028/2009)

ஜனவரி 3, 2022

(ஆர்.சுபாஷ் ரெட்டி மற்றும் ரிஷிகேஷ் ராய். ஜே.ஜே)

பணிச்சட்டம் – பதவிஉயர்வு ஏற்காமை – உறுதிசெய்யப்பட்ட பணி முன்னேற்ற திட்டம் (ஏ.சி.பி)ன் கீழ் பயனை பணியாளர் பெறுவாரா – சொந்த காரணங்களுக்காக வழங்கப்பட்ட பதவி உயர்வை எதிர்மேல்முறையீட்டாளர் – பணியாளர் மறுத்தது – இருப்பினும், ஏ.சி.பி திட்டத்தின் கீழ் அவர்களுக்கு பயன் வழங்கப்பட்ட பின்னர் அது திரும்பப் பெறப்பட்டது – எதிர்மேல்முறையீட்டாளர்கள் முந்தைய சம்பள விகிதத்திற்கு பணி இறக்கம் செய்யப்பட்டனர் – ஏ.சி.பி பயன் திரும்பப் பெறப்பட்டது எதிர்க்கப்பட்டது – ஏ.சி.பி. திட்டத்தின் உள்ள வரையறைப்படி அவர்கள் நிலை உயர்த்தப்பட்ட சம்பள விதிதத்தின் பயனைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் அல்ல என தீர்ப்பாயம் முடிவு செய்தது – ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் நிலைஉயர்வை திருப்பிக் கொடுக்கும்படி நீதியர் ஆயம் உத்தரவு வழங்கியது. மேல்முறையீட்டில், முடிவு : முறையான பதவி உயர்வு தரப்பட்டு, ஆனால் அது வருவதற்கு முன்னால் பணியாளரால் மறுக்கப்பட்டிருந்தால் நிதிசார்ந்த நிலை உயர்வுக்கு தகுதியானவரா, தேக்கநிலை காரணமாக நிதிநிலை உயர்வுக்கு மட்டும் அவள்/அவன் தகுதியற்றவர் – இது பணியாளருக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்பு இல்லை என்பதால் அல்ல, அவர் தனது சொந்தக்காரணங்களுக்காக அளிக்கப்பட்ட பதவி உயர்வை இழந்தார் என்பதால்தான் – பணியாளருக்கு

பரிகாரம் வழங்கப்படும்போது இந்த முக்கிய விடயத்தை உயர்நீதிமன்றம் முறையாக மதிப்பிடவில்லை – முறையான பதவி உயர்வினை மறுத்த பணியாளர்கள் 09.08.1999 தேதியிடப்பட்ட குறிப்பாணையின்படி எ.சி.பி. திட்டத்தின் நிதிநிலை உயர்வின் பயன்களை பெறுவதற்கு உரிமையுடையவர்கள் அல்ல – எனினும் உ.மே.எண்கள் 7150–7151/2009–இல் உள்ள இரு எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு முறையான பதவிஉயர்வு அன்றி நிபந்தனையுடன் கூடிய பதவி உயர்வு அளிக்கப்பட்டதால் அது அவர்களுக்குப் பொறுந்தாது. அவர்கள் பதவி உயர்வு மறுத்ததனால் ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் பயனைப் பெறத் தகுதியற்றவர் அல்ல – ஏற்றல் மற்றும் மறுத்தல் எனும் கோட்பாடு.

உ.மே.எண்கள் 7027–7028/2009–ஐ அனுமதித்தும் உ.மே.எண்கள் 7150–7251/2009–ஐ தள்ளுபடி செய்தும் இந்த நீதிமன்றம் தீர்மானித்தாவது:–

1.1. போதுமான பதவி உயர்வு வாய்ப்பு இல்லாமல் நியாயமான தேக்கநிலை மற்றும் கஷ்டம் எதிர்கொள்ளும் பணியாளர்களின் பிரச்னையைச் சமாளிக்க "காப்பு வலையாக" க்கருதி மத்திய அரசு பணியாளர்களுக்கு 09.08.1999–ல் ஓ.எம். வழங்கப்பட்டது. ஐந்தாவது மத்திய சம்பளக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சில உரிய மாறுதல்களுடன், அரசால் ஏ.சி.பி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், 12 ஆண்டு முறையான பணிக்குப் பின் நிதி நிலை உயர்வு வழங்கவும் மற்றும் முதல் நிதி நிலை உயர்வு வழங்கப்பட்ட நாளிலிருந்து 12 ஆண்டு முறையான பணிக்குப்பின் இரண்டாவதும், நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் தர முடிவு செய்யப்பட்டது. தொடர்புடைய நிபந்தனைகளான 5.1 மற்றும் 10 பின்வருமாறு இங்கு கீழே வடழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு,

வரையறுக்கப்பட்ட இடைவெளிகளான 12 ஆண்டுகள் மற்றும் 24 ஆண்டுகளின்போது முறையான பதவி உயர்வை பெறாத பணியாளர்களுக்கு மட்டுமே ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் நிதிநிலை உயர்வுக்கான பயன் கிடைக்கும். இது தொடர்பாக, நிபந்தனை எண் 5.1–இல் தெளிவாக அளிக்கப்பட்டுள்ளபோது, தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பதவி உயர்வை மறுத்த பணியாளர்களுக்கு ஆதரவாக தீர்மானித்தது நிபந்தனை எண் 10–ஐ நீதியராயம் குறித்துக்காட்டியது தேவையற்றது. அவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வை மறுத்திருந்தாலும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் ஒரு நிதி நிலை உயர்வுக்கு உரியவர்கள் என்றும், அத்தகைய பதவி உயர்வை ஏற்காதது அவர்களது இரண்டாவது நிலை உயர்வைத்தான் பாதிக்கும் என்றும் நீதிமன்றம் கருதுகிறது. அத்தகைய முடிவின்படி பணியாளருக்குத் தரப்பட்ட பதவி உயர்வை மறுத்த நிகர்வாக இருந்தாலும்கூட, ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் எதிர்மேல்முறையீட்டாளர்கள் பரிகாரத்திற்கு உரியவர்கள் என முடிவு செய்யப்பட்டது. ஏ.சி.பி. திட்டம் குறித்து படிக்கையில், முறையான பதவி உயர்வு நிர்ணயிக்கப்பட்ட 12 மற்றும் 24 ஆண்டுகளில் முறையே அவனுக்கு/அவளுக்கு கிடைக்கவில்லை என்றால் மட்டுமே நிதி நிலை உயர்வு சேரும் என்பதைக் காட்டுகிறது. குறையான எந்தப் பதவி உயர்வுமின்றி அதே பதவியில் சம்பந்தப்பட்ட பணியாளர் தேக்க நிலையில் இருந்தால் அவரது முழு பணிக்காலத்தில் நிதிநிலை உயர்வுக்கு உரிமையுடையவர் மற்றும் ஏற்கெனவே கூறியபடி, போதுமான பதவி உயர்வு வாய்ப்பு இல்லாமல் நியாயமான தேக்க நிலை மற்றும் கஷ்டம் எதிர்கொள்ளும் பணியாளர்களின் பிரச்சினையைச் சமாலிக்க "காப்புவலை" யாகக் கருதி மத்திய அரசு பணியாளர்களுக்கு 9.8.1999–இல் குறிப்பாணை வழங்கியது. ஆனால், முறையான பதவி உயர்வு வந்தும் அதனை ஏற்க மறுத்தும் மற்றும் அவரது சொந்த விருப்பால் தற்போதைய நிலையிலேயே இருக்க நேர்ந்தால் அந்தப் பணியாளர் இந்தத் திட்டத்தின் பயனைக் கோரலாமா? பதிவுருக்களிலிருந்து பார்க்கும்போது, மஞ்சு அரோரா மற்றும் சுமன் லதா பாட்டியா ஆகியோருக்கு பலதருணங்களில் உயர் நிலைக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, ஆயினும் அவர்கள் அதனை மறுத்து, அப்போதிருந்த ஊதிய விகிதத்திலேயே தொடர தேர்வு செய்தனர். 9.8.1999 தேதியிடப்பட்ட குறிப்பாணையின் பொருள், பின்னர் 18.7.2001 தேதியிடப்பட்ட குறிப்பாணை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதில், முறையான காலியிட அடிப்படையில் ஏ.சி.பி.–இன் பயன் வழங்கும்முன் பதவி உயர்வு தரப்பட்ட பணியாளர் முறையான பதவி உயர்வை ஏற்கவில்லை என்னும்போது, அவள்/அவன் ஏ.சி.பி பயன்கள் வழங்கப்பட தகுதியற்றவராகிறார். 18.7.2001 தேதியிடப்பட்ட அறிவிக்கையால் தெளிவுரை இல்லாதபோதும் 9.8.1999 தேதியிட்ட குறிப்பாணையின் கூறு 5.1–ஐ சாதாரணமாகப் படித்தாலே, பதவி உயர்வு சலுகையை ஏற்க மறுத்து தற்போதைய நிலையிலேயே இருக்க விருப்பம் தெரிவித்த பணியாளர் ஏ.சி.பி. பயன்களுக்கான உரிமையை இழக்கிறார் மற்றும் அத்தகைய பணியாளர் தேவையான விலக்குக் காலம் முடிந்த பின்னர் மட்டுமே அத்தகைய மறுப்பின் காரணமாக முறையான பதவி உயர்வுக்குப் பரிசீலிக்கப்படுவார் என்பது மிகத் தெளிவாகிறது. நிபந்தனை 5.1–இல் தெளிவாக வார்த்தைகள் இருந்தும், 9.8.1999 தேதியிடப்பட்ட குறிப்பாணையின் பொருள் குற்றமுரு ஆணையில் விடுபட்டுள்ளது மற்றும் அவர்களது சொந்த காரணங்களால் பதவி உயர்வை மறுத்த பணியாளர்களுக்கு சாதகமாக குறிப்பாணையின் நிபந்தனை 10–இல் உள்ள வார்த்தைகளை தேவையற்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

1.2. நிதி நிலைஉயர்வுக்குத் தகுதிபெறும் முன் முறையான பதவி உயர்வு தரப்பட்டு ஆனால் ஏற்க மறுத்திருந்தால், அவள்/அவன், தேக்கநிலை காரணமாயிருக்கும்போது நிதி நிலை உயர்வுக்கு உரியவரல்ல. இதற்குக் காரணம் என்னவென்றால் அது பதவி உயர்வு வாய்ப்பு இல்லாத நிகழ்வு அல்ல, ஆனால் அவரது சொந்தக் காரணங்களுக்காக அவரது பதவி உயர்வை இழக்க விரும்பியதே. இருப்பினும் இந்த முக்கிய விடையம் பணியாளர்களுக்கு பரிகாரம் தரும்போது உயர் நீதிமன்றத்தால் உரிய முறையில் பரிசீலிக்கப்படவில்லை. ஒரு பணியாளர், வழங்கப்பட்ட பதவி உயர்வை மறுக்கும்போது, சம்பந்தப்பட்ட பணியாளர் அவரது / அவளது பணியிடத்தை தக்க வைத்துக்கொள்ள அடிக்கடி பதவி உயர்வை மறுப்பதால், உயர்ந்த பதவியை நிர்வகிக்க பிரச்சினைகள் ஏற்பட்டு அது நிர்வாகச் சிரமங்களை ஏற்படுத்தும் என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டும். மேற்சொன்ன சூழ்நிலைகளில் மேல்முறையீட்டாளர்கள் சார்பாக சமர்பிக்கப்பட்ட வாதுரைகளின் நற்கூறுகளை நாங்கள் பார்க்கிறோம். விளைவாக, முறையான பதவி உயர்வை மறுத்த பணியாளர்கள்

9.8.1999 தேதியிடப்பட்ட குறிப்பாணையின் கீழ் கூறப்பட்டுள்ள நிதி நிலை உயர்வு பெற தகுதியற்றவர்கள் என விளம்பப்படுகிறது. இந்த சூழ்நிலையில் ஸ்காட்டிஷ் கோட்பாடான "ஏற்றுக்கொள் மற்றும் புறக்கனி" நினைவுக்கு வருகிறது. அதற்கு சமமான அங்கிலக் கோட்பாடு லிஸ்லென்டன் எதிர் சிஏவி போஷ்ச் லிமிடேட் (1940) ஏசி 412 பக்கம் 429 என்ற வழக்கில் லார்ட் அட்கின் என்பவர் பக்கம் 429–இல் கருத்துரைக்கப்பட்டது. மேற்சொன்ன கோட்பாடு இந்த வழக்கின் சூழ்நிலைகளுக்கு பொறுந்தும். எனவே, சம்பந்தப்பட்ட பணியாளர் ஒரே நேரத்தில் ஏற்றுக்கொள்ளவும் அனுமதிக்கவும் முடியாது அல்லது பேச்சு வழக்கில் கூறுவதானால் "விறும்பத்தக்க இரு விடையங்களை ஒரே சமயத்தில் செய்யமுடியாது. உ.மே. எண்கள் 7027–28/2009–இல் உள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு அவ்வாறு விளம்பப்படுகிறது.

1.3. இருப்பினும், அவர்களுக்கு முறையான பதவி உயர்வு வழங்காது ஆனால் பதவிக் குறைப்புக்கு உட்பட்டு இயங்கும் அடிப்படையில் நிபந்தனைபோடு கூடிய பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதால், உ.மே. எண்கள் 7150–7151 /2009–இல் உள்ள இரு எதிர்மேல்முறையீட்டாளர்கள்–பணியாளர்களுக்கு மேலே உள்ளது பொருந்தாது. இநத் இரு பணியாளர்களும் மாற்று வழிகளுக்கிடையே விருப்பத்தைப் பயன்படுத்தினார்கள் என்று கூறமுடியாது. அவ்வாறே மேற்சொன்ன கோட்பாடு பொருந்தாது மற்றும் தற்காலிக பதவி உயர்வை ஏற்க மறுத்தது என்பது அவர்களுக்கு எதிராக தீர்மானிக்கமுடியாது. 29.12.1988 தேதியிடப்பட்ட குறிப்பாணை மூலம் இரு பணியாளர்களான கந்தா சூரி மற்றும் வீணா அரோரா ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பதவி உயர்வை மறுத்தது ஏசிபி திட்டத்தின் கீழான பயன்களை பெற தகுதியற்றவர்களாக ஆக்கமுடியாது. அதன்படி அறிவிக்கப்படுகிறது. எதிர் மேல்முறையீட்டாளர்கள் இடைப்பட்ட காலத்தில் ஓய்வுபெறும் பயனை அடைந்து விட்டதால், இன்றிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் (வழங்கப்படாவிட்டாலுங்கூட) தொடர் விளைவான பரிகாரம் தகுதிவாய்ந்த இரு பணியாளர்களுக்கும் இந்த உத்தரவின்படி கிடைக்கப்பெறவேண்டும்.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 7027-7028/2009.

புதுடெல்லி, டெல்லி உயர்நிதிமன்ற நீ.பே. மனு (உ) எண்கள் 7227 மற்றும் 7283/2003-ல் 21.11.2007 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 7150-7151/2009

மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர்கள் செல்வி மீரா பட்டேல், புவன் மிஸ்ரா, ஆயுஷ் பூரி, அர்விந்த் குமார் ஷர்மா.

எதிர்மேல்முறையிட்டாளர்கள் சார்பாக வழக்கறிஞர்கள் டாக்டர் ஐ.பி. கவுர், ராஜீவ் மங்க்லிக், பியுஷ்ஷர்மா, ஏ.பி. தமிஜா, செல்வி தான்யாஷர்மா, சரத்குமார் சிங்கானியா.

நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு.ரிஷிகேஷ் ராய் அவர்களால் வழங்கப்பட்டது.

1. இரு வழக்குகளிலும் மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி. மீராபட்டேல் அவர்களின் வாதம் கேட்கப்பட்டது. உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1027-7028/2009-ல் எதிர்மேல்முறையீட்டாளருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ராஜீவ் மங்க்லிக் முன்னிலையானார். உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 7150-7151/2009-ல் எதிர்மேல்முறையிட்டாளர்கள் சார்பாக முறையே கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. பியூஷ் ஷர்மா மற்றும் ஏ.பி. தமிகா முன்னிலையானார்.

2. இங்குள்ள எதிர்மேல்முறையிட்டாளர்கள், மத்திய அரசின் கீழ் இயங்கும் பணியாளர்கள். பொது குறைபாடுகள் மற்றும் ஓய்வுதியங்களின் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட 09.08.1999 தேதியிடப்பட்ட குறிப்பாணையின் கீழ் மத்திய அரசு பணியாளர்களுக்கான உறுதிசெய்யப்பட்ட பணிமுன்னேற்றம் (சுருக்கமாக ஏ.சி.பி. திட்டம்) திட்டத்தின் கீழ் உள்ள பயனை கோரினர். 12 ஆண்டு பணிமுடித்த பின்னரும் பதவி உயர்வு பெறமுடியாத பணியாளர்களுக்காக அடுத்த உயர்நிலை சம்பளத்திற்கான நிதிநிலை உயர்வை ஏ.சி.பி. திட்டம் வழங்குகிறது. அதே போல் இரண்டாவது நிலை உயர்வு 24 ஆண்டுகளுக்குப் பின்னர் பெறலாம்.

3. முதுநிலை மொழிபெயர்ப்பாளராக (இந்தி) நியமிக்கப்பட்ட சுமன் லதா பாட்டியா மற்றும் மஞ்சு அரோரா, ஆகியோருடன் முறையான அடிப்படையில் உயர்பதவியான மொழிபெயர்ப்பு அதிகாரி (இந்தி) ஆக பதவிஉயர்வு வழங்கப்பட்டது. ஆனால் சொந்த காரணங்களுக்காக அவர்கள், வழங்கப்பட்ட பதவிஉயர்வை மறுத்து விட்டனர். இருப்பினும், 15.11.1999 அன்று எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் பயன் தரப்பட்டது ஆனால், அது அவர்களுக்கு தவறாக வழங்கப்பட்டது என்று கண்டறிந்த பிறகு அது முறையே 04.09.2022 மற்றும் 10.10.2022 தேதியிட்ட உத்தரவில் சுமன் லதா பாட்டியா மற்றும் மஞ்சு அரோராவிடமிருந்து திரும்பப் பெறப்பட்டது. காலியிட அடிப்படையில் தரப்பட்ட பதவி உயர்வை ஏற்க மறுத்த நபர்களுக்கு நிதிநிலை உயர்வு உரியதல்ல என்ற 18.07.2001 தேதியிட்ட குறிப்பாணையின் தெளிவுரையின்படி திரும்பப் பெறும் உத்தரவு வெளியிடப்பட்டது. பணியாளர் (இங்கு எதிர்மேல்முறையீட்டாளர்) பலமுறை பதவி உயர்வை மறுத்துள்ளதால் அவர், அவரது சொந்தக்காரணங்களால் முதுநிலை மொழிபெயர்பாளர் (இந்தி) நிலையில் தொடர்ந்து இருக்க விரும்பியதாகவும், அவர் தேக்க நிலையில்

உள்ளதாகவும் கூறமுடியாது என மேற்படி உத்தரவில் குறிப்பாக வெளிப்படுகிறது. அதன்படி, காரண விளக்க அறிவிப்பின் பதில் மற்றும் மறுப்புரை ஆகியவற்றை கருத்தில்கொண்டு ஏ.சி.பி–யின் பயன் திரும்பப் பெறப்பட்டு எதிர்மேல்முறையீட்டாளர் முந்தைய ஊதிய விகிதத்திற்கு இறக்கப்பட்டார். மற்றொரு பணியாளருக்கும் அதே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

4. இரு எதிர்மேல்முறையீட்டாளர்கள் மற்றும் ஒருவருக்கு திரும்பப்பெறப்பட்ட ஏ.சி.பி–யின் பயனை, எதிர்த்து மத்திய நிர்வாகத் தீர்ப்பாயம் முதன்மை அமர்வு (சுருக்கமாக தீர்ப்பாயம்) முன்பு அ.வி.எண் 2673/2002 (சுமன் லதா பாட்டியா), அ.வி.எண் 2674/2002 (வீனா அரோரா) மற்றும் அ.வி. எண் 3021/2002 (மஞ்சு அரோரா) முறையே தாக்கல் செய்யப்பட்டது.

5. ஒத்திசைவு ஆணையில் (28.08.2023) தீர்ப்பாயம் இரு குறிப்பாணைகளையும் (09.08.1999 மற்றும் 18.07.2001) கருத்திற்கொண்டு, ஒரே பதவியில் நீண்ட காலம் தேங்கியிருக்கும் பணியாளர்களுக்கு ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் பரிகாரம் வழங்க வகை செய்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், தெளிவுரை தகவல் தந்துள்ளது குறித்தும், திட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும், அசல் மேல்முறையீட்டாளர்கள் முறையான பதவி உயர்வை மறுத்துள்ளதால் ஏ.சி.பி. திட்ட வரையறைகளின்படி நிலை உயர்வு பெற்ற ஊதியத்திற்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என முடிவு செய்யப்பட்டுள்ளது. பணியாளர் முறையான பதவி உயர்வை ஏற்க மறுத்ததன் பேரில் அவர் சொந்த விருப்பில் தற்போதைய நிலையிலேயே இருக்க தேர்ந்தெடுத்ததால் தேக்க நிலையில் இருந்தார் எனக்கருத முடியாது என்று தீர்ப்பாயம் கருத்து தெரிவித்துள்ளது. அதன் விளைவாக ஏ.சி.பி. திட்டத்தின் படி

நிலை உயர்த்தப்பட்ட ஊதிய விகிதப் பயனுக்கு அவர்கள் தகுதியுடையவர்கள் அல்ல என அறிவிப்பதன் மூலமாக மூன்று மேல்முறையீட்டாளருக்கும் ஏ.சி.பி. பயன்களை திரும்பப்பெறும் பணியமர்த்துநரின் முடிவு சரியானது என காணப்படுகிறது. இருப்பினும், அவர்களது தரப்பில் தவறான விளக்கம் ஏதுமின்றி நிலை உயர்த்தப்பட்ட ஊதிய விகிதம் அனுமதிக்கப்பட்டது என்ற கருத்துடன் ஊதிய நிலை உயர்வை ரத்து செய்ததன் காரணமாக பெறப்பட்ட உத்தேச பிடித்தம் தடை செய்யப்பட்டுள்ளது.

6. அசல் விண்ணப்பதாரர்கள் ஏ.சி.பி.–யின் பயன்களை பெற தகுதியற்றவர்கள் என்று விளம்புகை செய்த தீர்ப்பாயத்தின் மேற்படி தீர்முடிவு முறையே நீ.பே.மனு (சி) எண் 7227/2003 (மஞ்சு அரோரா), நீ.பே.மனு (சி) எண் 7283/2003 (சுமன் லதா) வால் எதிர்க்கப்பட்டுள்ளது, இருவழக்குகளும் ஒன்றிணைந்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

7. நீதியர் ஆயம் 09.08.1999 நாளிட்ட குறிப்பாணையில் உள்ள நிபந்தனை எண் 5.1 மற்றும் நிபந்தனை 10–ஐக் குறிப்பிட்டு தரப்பட்ட பதவி உயர்வு வேண்டாம் என மறுத்த குறிப்பிட்ட பணியாளரின் பதவி உயர்வினை ஏற்காத செயல், அவர்களது இரண்டாவது நிலை உயர்வை மட்டுமே பாதிக்கும் என முடிவு செய்துள்ளது. பணியாளர்களுக்கு முதல் நிலை உயர்வின் பலன் முறையாக அளிக்கப்பட்டுள்ளது. அதை திரும்ப பெறப்பட்டிருக்கக் கூடாது என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி தீர்ப்பாயத்தின் முடிவு தலையீடு செய்யப்பட்டு, அதன் விளைவாக சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு எ.சி.பி திட்டத்தின் கீழ் நிலை உயர்வு மீண்டும் தர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

8. உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 7150–7151/2009–ல் அடிப்படை உண்மைகள் அதேபோன்றது. அதில் சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர்களான கன்டசூரி மற்றும் வீனா அரோரா முதுநிலை மொழிபெயர்ப்பாளர் (இந்தி) ஆக வான்வெளி தலைமையகத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த இரண்டு பணியாளர்களுக்கான முக்கிய வேறுபாடு என்னவெனில், அவர்களின் பணி மூப்பாளர் வேறு பதவிகளுக்கு வேறு அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டு அவர்கள் நிர்வாக காரணங்களுக்காக விமானப்படையின் தற்போதைய பதவிக்கு திரும்பினால் கன்டசூரி மற்றும் வீனா அரோரா ஆகிய இருவரும் பதவி இறக்கத்திற்கு உரியவர்கள் என்ற நிபந்தனையுடன் அவர்களுக்கு முறையான பதவி உயர்வுக்கு பதிலாக மொழி பெயர்ப்பு அதிகாரி (இந்தி) என்ற பதவி அதிகாரப்பூர்வ அடிப்படையில் வழங்கப்பட்டது.

9. கூடுதலாக, சுமன் லதா பாட்டியா மற்றும் மஞ்சு அரோரா ஆகியோரின் வழக்கில் முன்னதாக டெல்லி உயர்நீதிமன்ற நீதியர் ஆயத்தின் 21.11.2007 தேதியிட்ட பொது தீர்ப்புரையின் அடிப்படையில், அவர்களது பதவி உயர்வு மறுப்பு அவர்களது இரண்டாவது நிலை உயர்வை மட்டுமே பாதிக்கும் என்று பணியாளர்களுக்கு ஆதரவாக இந்த முடிவினை குறிப்பிடலாம்.

10. போதுமான பதவி உயர்வு வாய்ப்பு இல்லாமல் நியாயமான தேக்கநிலை மற்றும் கஷ்டம் எதிர்கொள்ளும் பணியாளர்களின் பிரச்னையைச் சமாளிக்க "காப்பு வலையாக" க்கருதி மத்திய அரசு பணியாளர்களுக்கு 09.08.1999–ல் ஓ.எம். வழங்கப்பட்டது. ஐந்தாவது மத்திய சம்பளக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சில உரிய மாறுதல்களுடன், அரசால் ஏ.சி.பி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், 12 ஆண்டு முறையான பணிக்குப் பின் நிதி நிலை உயர்வு வழங்கவும் மற்றும் முதல் நிதி நிலை உயர்வு

வழங்கப்பட்ட நாளிலிருந்து 12 ஆண்டு முறையான பணிக்குப்பின் இரண்டாவதும், நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் தர முடிவு செய்யப்பட்டது. தொடர்புடைய நிபந்தனைகளான 5.1 மற்றும் 10 பின்வருமாறு இங்கு கீழே வடழங்கப்பட்டுள்ளது.

"5.1. நேரடி நியமனமாக நியமிக்கப்பட்ட ஒருபணியாளரால் அந்த பணி நிலையிலிருந்த முறையான பதவி உயர்வுக்கெதிராக (அதே நிலையிலுள்ள பதவி உயர்வு மற்றும் துறை போட்டித் தேர்வு வழியாக வந்த விரைவு பதவி உயர்வு உட்பட) ஒரு பணியாளரின் முழுப் பணிக்காலத்திலும் ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் இரு நிதிநிலை உயர்வு கணக்கிடப்படவேண்டும். இதன் பொருள் என்னவெனில், வரையறுக்கப்பட்ட காலங்களில் (12 மற்றும் 24 ஆண்டுகளில்) முறையான பதவி உயர்வு இல்லையென்றால் மட்டுமே ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் இரு நிதிநிலை உயர்வு பணியாளருக்கு கிடைக்கும். பணியாளர் ஏற்கனவே ஒரு பதவி உயர்வு பெற்றிருந்தால், ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் 24 ஆண்டு முறையான பணிமுடிந்த பின்னரே அவர் இரண்டாவது நிதிநிலை உயர்வுக்கு தகுதி பெறுவார். ஒருவேளை, ஒருபணியாளருக்கு முறையான அடிப்படையில் இரு முறை முன்னர் பதவி உயர்வு பெற்றிருந்தால், ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் எந்த பயனும் அவருக்குக்கிடைக்காது.

***** ******* ******* ******

****** ****** ******* ******

10. ஒரு பணியாளர் மேற்படி பயனை ஏற்றால் அதைத் தொடர்ந்து ஏற்படும் காலி இடத்தின் முறையான பதவி உயர்வை ஏற்பதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார் என்ற சங்கதி ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் உயர் ஊதிய விகிதம் வழங்குவதற்கான நிபந்தனையாகும். ஒருவேளை, அவர் உயர் பதவியின் முயான பதவி

உயர்வினை ஏற்றுக்கொள்ள மறுத்தால், இது தொடர்பாக பொது அறிவுரைகளில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு முறையான பதவி உயர்விற்கு அவர் சாதாரணமான விலக்குக்குட்பட்டவராவார். இருப்பினும். அவர் முறையான பதவி உயர்வினை ஏற்கும்போது, முறையான பதவி உயர்வுக்கு எவ்வளவு காலம் விலக்கிவைக்கப்பட்டாரோ அது இந்த காரணத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது என்ற நிபந்தனைக்குட்பட்டு அந்த உயர்நிலையில் ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் அவர் தேவையான தகுதியான பணி / காலம் முடிந்த பின்னரே அவர் தகுதியுடையவர் ஆவார். உதாரணமாக, ஒரு நபர் 12 ஆண்டு முறையாகப் பணிமுடித்தபின் ஒரு நிதிநிலை உயர்வு பெற்றிருந்து, பின்னர் அதிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழித்து அவர் முறையான எதவி உயர்வை ஏற்க மறுத்தால் மற்றும் தொடர்ச்சியாக ஒரு ஆண்டுக்கு விலக்களிக்கப்பட்டிருந்து, அதைத் தொடர்ந்து முறையான பதவியில் அவர் 25 ஆண்டுகள் (12+12+1) பணிமுடித்தபின் முறையான அடிப்படையில் உயர்தரத்தில் பதவி உயர்வு அடைந்திருந்தால், அவர், உயர் நிலையின் முறையான பணியில் தேவைப்படுகின்ற 12 ஆண்டுகள், ஓர் ஆண்டு விலக்கு காலமாக எடுத்துக்கொள்ளமுடியாது என்பதால் உயர் நிலையில் முதல் நிதி நிலை உயர்வு (2+10) க்குப் பின்னர் அவர் ஏற்கெனவே பணியாற்றிய கூடுதல் 2 ஆண்டுகளுடன் சேர்த்து 10 ஆண்டுகள் பணியாற்றினால் மட்டுமே ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் 2 பணிநிலை உயர்வுக்கு தகுதியுடையவராக கருதப்படுவார்."

11. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வரையறுக்கப்பட்ட இடைவெளிகளான 12 ஆண்டுகள் மற்றும் 24 ஆண்டுகளின்போது முறையான பதவி உயர்வை பெறாத பணியாளர்களுக்கு மட்டுமே ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் நிதிநிலை உயர்வுக்கான பயன் கிடைக்கும். இது தொடர்பாக, நிபந்தனை எண் 5.1–இல் தெளிவாக அளிக்கப்பட்டுள்ளபோது, தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பதவி உயர்வை மறுத்த பணியாளர்களுக்கு ஆதரவாக தீர்மானித்தது நிபந்தனை எண் 10–ஐ நீதியராயம் குறித்துக்காட்டியது தேவையற்றது. அவர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வை மறுத்திருந்தாலும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் ஒரு நிதி நிலை உயர்வுக்கு உரியவர்கள் என்றும், அத்தகைய பதவி உயர்வை ஏற்காதது அவர்களது இரண்டாவது நிலை உயர்வைத்தான் பாதிக்கும் என்றும் நீதிமன்றம் கருதுகிறது. அத்தகைய முடிவின்படி பணியாளருக்குத் தரப்பட்ட பதவி உயர்வை மறுத்த நிகர்வாக இருந்தாலும்கூட, ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் எதிர்மேல்முறையீட்டாளர்கள் பரிகாரத்திற்கு உரியவர்கள் என முடிவு செய்யப்பட்டது.

12. 9.8.99–இல் விளம்புகை செய்யப்பட்ட ஏ.சி.பி. திட்டத்தின் கீழ் உள்ள தொடர்புடைய நிபந்தனைகளையும் மிகக் குறிப்பாக கூறு 5.1 மற்றும் 10 குறித்து மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் விளக்கினார். பணியாளர்களுக்கு பதவி உயர்வு தந்ததையும் குடும்பத் தேவை அல்லது பிறிதொர இடத்துக்கு நகர்தல் போன்ற அத்தகைய அவரகளது சொந்த காரணங்களுக்காக அதை ஏற்க மறுத்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு அவர் கொண்டுவந்தார்.

13. ஏ.சி.பி. திட்டம் குறித்து படிக்கையில், முறையான பதவி உயர்வு நிர்ணயிக்கப்பட்ட 12 மற்றும் 24 ஆண்டுகளில் முறையே அவனுக்கு/அவளுக்கு கிடைக்கவில்லை என்றால் மட்டுமே நிதி நிலை உயர்வு சேரும் என்பதைக் காட்டுகிறது. குறையான எந்தப் பதவி உயர்வுமின்றி அதே பதவியில் சம்பந்தப்பட்ட பணியாளர் தேக்க நிலையில் இருந்தால் அவரது முழு பணிக்காலத்தில் நிதிநிலை உயர்வுக்கு உரிமையுடையவர் மற்றும் ஏற்கெனவே கூறியபடி, போதுமான பதவி உயர்வு வாய்ப்பு இல்லாமல் நியாயமான தேக்க நிலை மற்றும் கஷ்டம் எதிர்கொள்ளும் பணியாளர்களின் பிரச்சினையைச் சமாலிக்க "காப்புவலை" யாகக் கருதி மத்திய அரசு பணியாளர்களுக்கு 9.8.1999–இல் குறிப்பாணை வழங்கியது. ஆனால், முறையான பதவி உயர்வு வந்தும் அதனை ஏற்க மறுத்தும் மற்றும் அவரது சொந்த விருப்பால் தற்போதைய நிலையிலேயே இருக்க நேர்ந்தால் அந்தப் பணியாளர் இந்தத் திட்டத்தின் பயனைக் கோரலாமா?

14. பதிவுருக்களிலிருந்து பார்க்கும்போது, மஞ்சு அரோரா மற்றும் சுமன் லதா பாட்டியா ஆகியோருக்கு பலதருணங்களில் உயர் நிலைக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, ஆயினும் அவர்கள் அதனை மறுத்து, அப்போதிருந்த ஊதிய விகிதத்திலேயே தொடர தேர்வு செய்தனர். 9.8.1999 தேதியிடப்பட்ட குறிப்பாணையின் பொருள், பின்னர் 18.7.2001 தேதியிடப்பட்ட குறிப்பாணை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதில், முறையான காலியிட அடிப்படையில் ஏ.சி.பி.–இன் பயன் வழங்கும்முன் பதவி உயர்வு தரப்பட்ட பணியாளர் முறையான பதவி உயர்வை ஏற்கவில்லை என்னும்போது, அவள்/அவன் ஏ.சி.பி பயன்கள் வழங்கப்பட தகுதியற்றவராகிறார். 18.7.2001

தேதியிடப்பட்ட அறிவிக்கையால் தெளிவுரை இல்லாதபோதும் 9.8.1999 தேதியிட்ட குறிப்பாணையின் கூறு 5.1–ஐ சாதாரணமாகப் படித்தாலே, பதவி உயர்வு சலுகையை ஏற்க மறுத்து தற்போதைய நிலையிலேயே இருக்க விருப்பம் தெரிவித்த பணியாளர் ஏ.சி.பி. பயன்களுக்கான உரிமையை இழக்கிறார் மற்றும் அத்தகைய பணியாளர் தேவையான விலக்குக் காலம் முடிந்த பின்னர் மட்டுமே அத்தகைய மறுப்பின் காரணமாக முறையான பதவி உயர்வுக்குப் பரிசீலிக்கப்படுவார் என்பது மிகத் தெளிவாகிறது.

15. நிபந்தனை 5.1–இல் தெளிவாக வார்த்தைகள் இருந்தும், 9.8.1999 தேதியிடப்பட்ட குறிப்பாணையின் பொருள் குற்றமுரு ஆணையில் விடுபட்டுள்ளது மற்றும் அவர்களது சொந்த காரணங்களால் பதவி உயர்வை மறுத்த பணியாளர்களுக்கு சாதகமாக குறிப்பாணையின் நிபந்தனை 10–இல் உள்ள வார்த்தைகளை தேவையற்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

16. நிதி நிலைஉயர்வுக்குத் தகுதிபெறும் முன் முறையான பதவி உயர்வு தரப்பட்டு ஆனால் ஏற்க மறுத்திருந்தால், அவள்/அவன், தேக்கநிலை காரணமாயிருக்கும்போது நிதி நிலை உயர்வுக்கு உரியவரல்ல. இதற்குக் காரணம் என்னவென்றால் அது பதவி உயர்வு வாய்ப்பு இல்லாத நிகழ்வு அல்ல, ஆனால் அவரது சொந்தக் காரணங்களுக்காக அவரது பதவி உயர்வை இழக்க விரும்பியதே. இருப்பினும் இந்த முக்கிய விடையம் பணியாளர்களுக்கு பரிகாரம் தரும்போது உயர் நீதிமன்றத்தால் உரிய முறையில் பரிசீலிக்கப்படவில்லை.

17. ஒரு பணியாளர், வழங்கப்பட்ட பதவி உயர்வை மறுக்கும்போது, சம்பந்தப்பட்ட பணியாளர் அவரது / அவளது பணியிடத்தை தக்க வைத்துக்கொள்ள அடிக்கடி பதவி உயர்வை மறுப்பதால், உயர்ந்த பதவியை நிர்வகிக்க பிரச்சினைகள் ஏற்பட்டு அது நிர்வாகச் சிரமங்களை ஏற்படுத்தும் என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டும்.

18. மேற்சொன்ன சூழ்நிலைகளில் மேல்முறையீட்டாளர்கள் சார்பாக சமர்பிக்கப்பட்ட வாதுரைகளின் நற்கூறுகளை நாங்கள் பார்க்கிறோம். விளைவாக, முறையான பதவி உயர்வை மறுத்த பணியாளர்கள் 9.8.1999 தேதியிடப்பட்ட குறிப்பாணையின் கீழ் கூறப்பட்டுள்ள நிதி நிலை உயர்வு பெற தகுதியற்றவர்கள் என விளம்பப்படுகிறது. இந்த சூழ்நிலையில் ஸ்காட்டிஷ் கோட்பாடான "ஏற்றுக்கொள் மற்றும் புறக்கனி" நினைவுக்கு வருகிறது. அதற்கு சமமான அங்கிலக் கோட்பாடு லிஸ்லென்டன் எதிர் சிஏவி போஷ்ச் லிமிடேட் (1940) ஏசி 412 பக்கம் 429 என்ற வழக்கில் லார்ட் அட்கின் என்பவர் பக்கம் 429–இல் கருத்துரைத்ததாவது:

> "…. இந்த கோட்பாடு பொருந்தும் நேர்வுகளில், சம்பந்தப்பட்ட நபர் வசம் இரு தெரிவு உள்ளது. அவற்றில் ஏதேனும் ஒன்றை அவர் பின்பற்ற சுதந்திரம் உள்ளது, அனால் இர்டையும் அல்ல. எங்கு இந்த கோட்பாடு பொருந்துகிறதோ அங்கு ஒன்றை ஏற்றவர் பின்னர் மற்றொன்ரை கூறமுடியாது என்ற அறிவுடன், எந்த நபரிடம் உள்ளதோ அவர் வசம் மாற்றமுடியாதபடி உள்ளது….."

மேற்சொன்ன கோட்பாடு இந்த வழக்கின் சூழ்நிலைகளுக்கு பொறுந்தும். எனவே, சம்பந்தப்பட்ட பணியாளர் ஒரே நேரத்தில் ஏற்றுக்கொள்ளவும் அனுமதிக்கவும் முடியாது அல்லது பேச்சு வழக்கில் கூறுவதானால் "விறும்பத்தக்க இரு விடையங்களை

ஒரே சமயத்தில் செய்யமுடியாது". உ.மே. எண்கள் 7027-28/2009-இல் உள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு அவ்வாறு விளம்பப்படுகிறது.

19. இருப்பினும், அவர்களுக்கு முறையான பதவி உயர்வு வழங்காது ஆனால் பதவிக் குறைப்புக்கு உட்பட்டு இயங்கும் அடிப்படையில் நிபந்தனைபோடு கூடிய பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதால், உ.மே. எண்கள் 7150-7151 /2009-இல் உள்ள இரு எதிர்மேல்முறையீட்டாளர்கள்-பணியாளர்களுக்கு மேலே உள்ளது பொருந்தாது. இநத் இரு பணியாளர்களும் மாற்று வழிகளுக்கிடையே விருப்பத்தைப் பயன்படுத்தினார்கள் என்று கூறமுடியாது. அவ்வாறே மேற்சொன்ன கோட்பாடு பொருந்தாது மற்றும் தற்காலிக பதவி உயர்வை ஏற்க மறுத்தது என்பது அவர்களுக்கு எதிராக தீர்மானிக்கமுடியாது. 29.12.1988 தேதியிடப்பட்ட குறிப்பாணை மூலம் இரு பணியாளர்களான கந்தா சூரி மற்றும் வீணா அரோரா ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பதவி உயர்வை மறுத்தது ஏசிபி திட்டத்தின் கீழான பயன்களை பெற தகுதியற்றவர்களாக ஆக்கமுடியாது. அதன்படி அறிவிக்கப்படுகிறது.

20. எதிர் மேல்முறையீட்டாளர்கள் இடைப்பட்ட காலத்தில் ஓய்வுபெறும் பயனை அடைந்து விட்டதால், இன்றிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் (வழங்கப்படாவிட்டாலுங்கூட) தொடர் விளைவான பரிகாரம் தகுதிவாய்ந்த இரு பணியாளர்களுக்கும் இந்த உத்தரவின்படி கிடைக்கப்பெறவேண்டும்.

21. மேற்சொன்னவாறு முதல் இரு மேல்முறையீடுகளான உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 7027-7028/2009 அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும் மற்ற

இரு மேல்முறையீடுகளான உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 7150-7151/2009 தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு குறித்து உத்தரவு ஏதுமில்லை.

மேல்முறையீடு தீர்வு செய்யப்படுகிறது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."